SMOKE FREE ONTARIO

**புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005**
**எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : காண்டோமினிய குடியிருப்புக்களை, அபார்ட்மெண்ட்டுகளை, மற்றும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக குடியிருப்புக்களை**

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## காண்டோமினிய குடியிருப்புக்கள், அபார்ட்மெண்ட்டுகள், மற்றும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக குடியிருப்புக்கள்

காண்டோமினிய குடியிருப்புக்கள், அபார்ட்மெண்ட்டுகள், மற்றும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக குடியிருப்புக்களின் பொதுவான பகுதிகளில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டடுள்ளது. எலவேட்டர்கள், படிக்கட்டுகள், கூடவழிகள், பார்க்கிங் காரேஜுகள், சலவைக் கூடங்கள், முகப்புக் கூடங்கள், உடற்பயிற்சி இடங்கள் மற்றும் விருந்து அல்லது கேளிக்கை அறைகள் போன்றவை பொதுவான இடங்களின் உதாரணங்களாகும்.

## உரிமையாளர்களின் கடமைப் பொறுப்புக்கள்

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என எல்லோரும் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- இந்த குடியிருப்புக்களின் பொதுவான பகுதிகளில் எவரும் புகை பிடிக்காமல் இருப்பதை உறுதிபடுத்துங்கள்
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

Ontario

## அமலாக்கம்

சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் சோதனைகளையும், குற்றச்சாட்டுக்கள் விசாரணையையும் காண்டோமினிய குடியிருப்புக்கள், அபார்ட்மெண்ட்டுகள், மற்றும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக குடியிருப்புக்களில் மேற்கொள்ளும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario